தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066



dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்



நகராட்சியில் அனுமதி பெற்ற வாகனம்
ராஜா 24 HOUR SERVICE
செப்டிக் டேங்க்
கிளீனிங் சர்வீஸ்
குறைந்த செலவில்
சுத்தம் செய்து தருகிறோம்

63748 77947, 81480 84081



| Vol: 02 | Issue: 256 | 4 Pages | 14.4.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 256 | 4 பக்கங்கள் | 14.4.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும்**
**எண்ணின் தவத்தான் வரும்**

**விளக்கம்:**
**தீமை செய்யும் பகைவரை அடக்குதலும் நன்மை செய்யும் நண்பரை உயர்த்துதலும் நினைத்த அளவில் தவத்தின் வலிமையால் உண்டாகும்.**

# 49,542 பேருக்கு ரூ.332.60 கோடியில் நலத்திட்ட உதவிகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்

சென்னை ஏப்.14

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் 2025 ஏப்ரல் 14ம் தேதியன்று அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளான சமத்துவ நாளில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை, எம்.சி. ராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் 44 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் தரைமற்றும் பத்து தளங்களுடன் 484 மாணவர்கள் தங்கும் வசதியுடன் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின கல்லூரி மாணவர்களுக்கான புதிய விடுதிக் கட்டிடத்தை திறந்து வைக்க உள்ளார்.

அதனைத் தொடர்ந்து, சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள அம்பேத்கர் மணிமண்டபத்தில் உள்ள அவரது சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ்நாடு முதல்அமைச்சர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். பின்னர், அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு, முதல்அமைச்சர் தலைமையில் "சமத்துவ நாள்" உறுதி மொழி ஏற்கப்பட உள்ளது.

தொடர்ந்து, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெறவுள்ள சமத்துவ நாள் விழாவில், தமிழ்நாடு முதல்அமைச்சர் 227 கோடியே 85 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவ, மாணவியர்களுக்கான 18 விடுதிக் கட்டடங்கள், 46 பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு, 19 சமுதாய நலக்கூடங்கள், 22 கல்லூரி விடுதிகளில் கற்றல் கற்பித்தல் கூடம் மற்றும் 1000 பழங்குடியினர் குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைக்கவுள்ளார். மேலும் அவர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த





48,436 பயனாளிகளுக்கு 104 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கவுள்ளார்.

தமிழ்நாடு முதல்அமைச்சர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெறவுள்ள சமத்துவ நாள் விழாவில் மொத்தம் 49,542 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 332 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்குவதோடு, கட்டிடங்களை திறந்து வைக்க உள்ளார். மேலும் அவர் தமிழாக்கம் செய்யப்பட்ட அண்ணல் அம்பேத்கரின் இரண்டு நூல்களையும், வன உரிமைச் சட்டத்திற்கான வரைபடத்தையும் வெளியிட உள்ளார்.

இவ்விழாவில், பிரகாஷ் அம்பேத்கர் சிறப்புரையாற்ற உள்ளார். தமிழக அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளான சமத்துவ நாளையொட்டி அனைத்து மாவட்டங்களிலும் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில்இதேபோன்றுசிறப்புநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

## பரஸ்பர வரி விதிப்பில் இருந்து ஸ்மார்ட்போன்கள், கணினிகளுக்கு விலக்கு; டிரம்ப் அறிவிப்பு



நியூயார்க், ஏப்.14


அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்டு டிரம்ப் பதவியேற்ற பிறகு, பல அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். கடந்த 2ந்தேதி, இந்தியாஉள்படபல்வேறு உலக நாடுகளுக்கு பரஸ்பர வரிகளை அறிவித்து அதிர்ச்சி ஏற்படுத்தினார். இந்திய பொருட்களுக்கு 26 சதவீத வரி விதிக்கப்பட்டது.

அமெரிக்காவின் நடவடிக்கைக்கு சீனா பதிலடி கொடுத்தது. அமெரிக்க பொருட்கள் மீது 34 சதவீத வரி விதித்தது. இதனால், சர்வதேச பொருளாதார மந்தநிலை உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், டிரம்ப் விதித்துள்ள பரஸ்பர வரிகளில் இருந்து ஸ்மார்ட்போன்கள் மற்றும் கணினிகள் உள்ளிட்ட சில குறிப்பிட்ட மின்னணு பொருட்களுக்கு விலக்கு அளித்து அறிவிக்கப்பட்டு உள்ளது.

அமெரிக்காவின் சுங்க மற்றும் எல்லை பாதுகாப்பு துறை வெளியிட்ட அறிவிப்பில், இதுவரை 20 பொருட்கள் பட்டியலிடப்பட்டு உள்ளன. இவற்றில் அரை கடத்திகள் அடிப்படையிலான மின்னணு கருவிகள், தரவுகள் சேமிப்பு கருவிகள் உள்ளிட்ட பொருட்கள் இந்த பட்டியலில் உள்ளன.

## தென்கொரியா: சுரங்கப்பாதை இடிந்து விபத்து மீட்புப்பணிகள் தீவிரம்



சியோல், ஏப்.14

தென்கொரியாவின் தலைநகர் சியோலில் வங்மயோங் என்ற நகரம் உள்ளது. இப்பகுதியில் பொதுமக்கள் வசதிக்காக சுரங்கப்பாதை கட்டப்பட்டு வந்தது.

இந்நிலையில், சுரங்கப்பாதை இன்று திடீரெனஇடிந்துவிழுந்து விபத்துக்குள்ளானது. இந்த சம்பவத்தில் சுரங்கப்பாதை பணியை மேற்கொண்ட 2 ஊழியர்கள் சிக்கிக்கொண்டனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் இடிபாடுகளுக்குள் சிக்கிய 2 பேரையும் மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சுரங்கப்பாதை அமைக்கும்போது அருகே உள்ள கட்டிடங்களில் விரிசல் ஏற்பட்டதால் பெரும்பாலான ஊழியர்கள் பணியை நிறுத்திவிட்டு புறப்பட்டுள்ளனர். அப்போது திடீரென சுரங்கம் இடிந்து விழுந்துள்ளது. இதில், 2 பேரும் சிக்கிக்கொண்டனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

## ஆஸ்திரேலியாவில் இந்திய தூதரகத்தை சேதப்படுத்திய மர்ம நபர்கள்



சிட்னி, ஏப்.14

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் உள்ள இந்திய தூதரகத்தின் நுழைவாயிலில் உள்ள பெயர்ப்பலகை மீது மர்ம நபர்கள் சிலர் வண்ணம் பூசி, அதனை சேதப்படுத்தியுள்ளனர். இந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை அதிகாலை 1 மணியளவில் நடந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக ஆஸ்திரேலிய அரசிடம் கண்டனத்தை பதிவு செய்ததாக கான்பெராவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆஸ்திரேலியாவில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் துணை தூதரக அலுவலகங்களில் பாதுகாப்பை தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் அண்மைக்காலமாக இந்து கோவில்கள் மற்றும் இந்திய தூதரகங்கள் மீதான தாக்குதல் அதிகரித்திருப்பது அந்நாட்டில் வாழும் இந்திய சமூகத்தினரை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

## ஆஸ்திரேலியாவில் 10 ஆயிரம் மாணவர்களின் தகவல் திருட்டு

கான்பெரா, ஏப்.14

ஆஸ்திரேலியாவின் நியூ சவுத்வேல்ஸ் மாகாணத்தில் சிட்னி பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. அங்கு பயிலும் மாணவர்களின் தனிப்பட்ட விவரங்கள் திருடப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதற்கிடையே அங்குள்ள இணையதளத்தில் சிட்னி பல்கலைக்கழக மாணவர்கள் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் விவரங்கள் கண்டறியப்பட்டன. அவை கடந்த 5 மாதங்களுக்கு முன்பு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இது அங்கு பயிலும் மாணவர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனையடுத்து அந்த தகவல்களை மேற்கொண்டு பகிரதடை விதித்து சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் இந்த சம்பவம் குறித்து சைபர் கிரைம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கழக மேனாள் அமைப்புச்செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் சேதுநாட்டு செல்லக்கிளி, சிறுகதை மன்னன் எஸ். எஸ். தென்னரசு நினைவேந்தல் நிகழ்ச்சி: அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தலைமையில் அமைதிப்பேரணி

அமைச்சர் பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், தென்னவன் , திண்டுக்கல் ஐ. லியோனி, சேர்மன் மாரியப்பன் கென்னடி, சேர்மன் சேங்கைமாறன், ஜோன்ஸ் ரூஸோ, நா. குணசேகரன் , முத்துத்துரை, முனைவர் தமிழ்ப்ரியா பங்கேற்பு

சிவகங்கை மாவட்டம் திருக்கோட்டியூரில் சட்டமன்ற மேனாள் உறுப்பினர், கழக மேனாள் அமைப்புச்செயலாளர், சிறுகதை மன்னன், சேதுநாட்டு செல்லக்கிளி என முத்தமிழறிஞர், தானைத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களால் அழைக்கப்பட்ட எஸ். எஸ். ட்டி என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்ட எஸ். எஸ். தென்னரசு அவர்களின் 34 வது நினைவுநாள் நிகழ்ச்சி காலையில் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்ட திமுக சார்பில் நடைபெறும் இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் மாவட்ட திமுக செயலாளரும் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் தலைமையில் தெனனரசு அவர்களின் சொந்த இல்லத்திலிருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரம்வரை அமைதிப்பேரணியாக புறப்பட்டு நடந்து சென்று பின்னர் திருப்புத்தூர் சிவகங்கை சாலையில் தாளிபட்டியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்பட்டது.



ஆண்டுகள் தோறும் நடைபெறும் இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் மாவட்ட திமுக சுற்றுசூழல் அணி மாவட்ட அமைப்பாளர் எஸ். எஸ். ஏ வல்லபாய், மாவட்ட விவசாய அணி எஸ்.. எஸ். அருணாச்சலம், இராமநாதபுரம் மாவட்ட பொறுப்பாளர் சட்டமன்ற உறுப்பினர் முத்துராமலிங்கம் காதர்பாட்ஷா, சட்டமன்ற மேனாள் உறுப்பினர்கள் ஒன்றிய செயலாளர் சுப. மதியரசன், சேர்மன் மாரியப்பன் கென்னடி, வணக்கத்திற்குரியதுணை மேயர் நா. குணசேகரன், துணை மேயர் சே. முத்துத்துரை, சேர்மன் கோகிலராணி நாராயணன், தேவகோட்டை நகர்க்கழக செயலாளர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர், கவுன்சிலர் பெரி. பாலமுருகன் அம்பலம், தலைமைப்பொதுக்குழு உறுப்பினர்கள் பளாளத்தூர் கே. எஸ். ரவி, அறங்காவலர் ஏஆர். ஜயமூர்த்தி, நகரம் பொன்னுச்சாமி, சேர்மன் சண்முகவடிவேலு, ஒன்றியக்கழக செயலாளர்கள் கோட்டையூர் டாக்டர் ஆனந்த்,திருமலைமுத்துராமலிங்கம், துரை. இராஜமாணி, வே.தமிழ்மாறன், கா. வெங்கட்ராமன், ஏனாதி கடம்பசாமி, வழக்கறிஞர் அண்ணத்துரை, விராமதி மாணிக்கம், பூபாளசிங்கம், சின்னத்துரை, பேரூர் கார்த்திகேயன், மாவட்ட நிர்வாகிகள் மாணவரணி கதிர். இராஜ்குமார், கே. எஸ். நாராயணன், மகளிரணி பவானி கணேசன், தொண்டரணி ஹேமலதா செந்தில், பேராசிரியர் சிங்கமுத்து, கொத்தமங்கலம் சேது, ருக்மா சரவணன், மகளிரணி மணிமேகலை , காஞ்சனா, ஆலவயல் முரளி சுப்பையா, கிங் கார்த்திக், தேவகோட்டை அழகையா, விவசாய அணி காளிமுத்து, டி. ஆர். சேகர், அண்ணாமலை, தொமுசமுருகேசன், பிரமனூர் நந்தகோபால் , அச்சங்குளம் முருகன், திருப்பாச்சேத்தி காத்தமுத்து, பூவந்தி பன்னீர்செல்வம், , பிரவீன், தேவகோட்டை அன்புச்செழியன், கருணாநிதி, அப்பாச்சாமி, சீமான் சுப்பையா, ஏடி. என். ஆர். தங்கமணி, தொண்டரணி ராஜா, அவைத்தலைவர் ரவிச்சந்திரன், மகளிரணி கவுன்சிலர் சண்முகப்ரியா, சிவகங்கை மகளிர் தொண்டரணி இராஜேஷ்வரி அண்ணாத்துரை, லதா நாகராஜன், ஐடி விங் கண்ணன், துணைச்செயலாளர் கோலாந்தி கோதண்டபாணி, காளையார்கோவில் கண்ணதாசன், நீலமேகம் , கொன்னக்குளம் மலைச்சாமி, ஈஷ்வரன் , தேளி கோபால், தேவாரம்பூர் இராமநாதன், பிள்ளையார்பட்டி சதீஷ்குமார், அயூப் கான், சோம சதீஷ்குமார், சுப. ஜெயக்குமார், மாணவரணி கார்த்திக், செம்புக்குட்டி, பாலாஜி, தினேஷ்,, பாலாஜி, இராஜராஜன், வசந்த், நமக்கோட்டி உள்ளிட்டகழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு மாலை வைத்து மரியாதை செலுத்தினர்..

இதனிடையே சிவகங்கை மாவட்ட திமுக சுற்றுசூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ். ஏ. வல்லபாய் அவர்களின் ஏற்பாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் பல்வேறு வகையான மரக்கன்றுகள் வழங்கப்பட்டது...

நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிவகங்கை மாவட்ட திமுக மற்றும் எஸ். எஸ். தென்னரசு குடும்பத்தினர் செய்திருந்தனர்...

## சிவகங்கை வடக்கு ஒன்றியக்கழக திமுக சார்பில் முதலமைச்சர் பிறந்தநாள் விழா 2072 பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள், திண்டுக்கல் லியோனி பட்டிமன்றம்

சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுகழகம் சார்பில் கீழப்பூங்குடி கிளைக்கழகத்தில் சிறுகதை மன்னன், சேதுநாட்டு செல்லக்கிளி எஸ். எஸ். தென்னரசு திடலில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவாக தமிழ்நாடு பாடநூல் நிறுவனத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி தலைமையிலான குழுவினர் பங்கேற்கும் பட்டிமன்றம் மற்றும் 2072 பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது..




அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், மேனாள் அமைச்சர் தென்னவன், சட்டமன்ற உறுப்பினர் சேர்மன் மாரியப்பன் கென்னடி, மாவட்ட துணைச்செயலாளர்கள் சேர்மன் சேங்கைமாறன், ஜோன்ஸ்ரூஸோ,கழககொபசெதுணைச்செயலாளர் முனைவர்தமிழ்ப்ரியாவேங்கைபிரபாகரன், மாநில சுற்றுசூழல் அணி துணைச்செயலாளர் ரஞ்சன் ராய், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் ஆகியோர் பங்கேற்றனர்..

கொட்டும் பெருமழையிலும் சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு வடக்கு ஒன்றியக்கழக செயலாளரும் பெரியாறு ஐந்து மாவட்ட பாசன விவசாயிகள் சங்கத்தலைவருமான திருமலை ஆ. முத்துராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அவைத்தலைவர் பாலுச்சாமி , துணைச்செயலாளர்கள் பண்ணையார் வில்லிபட்டி ஆ. இராமமூர்த்தி, மேனாள் கவுன்சிலர் பத்மாவதி பிரபாகரன், பொருளாளர் தொமுச முருகேசன், மாவட்ட பிரதிநிதிகள் ஒக்கூர் சோமசுந்தரம், சோழபுரம் மாரி, மாவட்ட மகளிரணி பவானி கணேசன் , மேனாள் சேர்மன் மஞ்சுளா பாலச்சந்தர், ஒன்றிய மகளிரணி லதா நாகராஜன் , மேனாள் கவுன்சிலர் லெட்சுமி மாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட திமுக செயலாளருமான மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது நலத்திட்ட உதவிகளை சுமார் 2072 பொதுமக்களுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் டாக்டர் ம. ஜெயராமன், துரை. இராஜாமணி, ஆர். எம். கென்னடி, நகரம் பொன்னுச்சாமி, தலைமைப்பொதுக்குழு உறுப்பினர் அறங்காவலர் ஏஆர். ஜெயமூர்த்தி, மாவட்ட அணி நிர்வாகிகளான மாணவரணி கதிர். இராஜ்குமார், சுற்றுசூழல் எஸ். எஸ். ஏ. வல்லபாய், விளையாட்டு அணி கே. எஸ். நாராயணன், ஆதிதிராவிடர் அணி சிங்கமுத்து, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ். எம். மதிவாணன், கிங் கார்த்திக் , இளைஞரணி இடையமேலூர் வேல்முருகன், மாவட்ட மகளிரணி மேனாள் ஊராட்சி தலைவர் அரசனூர் செல்வராணி ஐயப்பன், பாலச்சந்தர் , கண்டாங்கிபட்டி மந்தக்காளை, தமறாக்கி ரவி, சீமான் சுப்பையா, மெ. காளிமுத்து, பிள்ளையார்பட்டி சதீஷ்குமார், வாடிவாசல் முத்துவேல்செல்வம், மேனாள் கவுன்சிலர் வண்டவாசி கோவிந்தராஜன், மாவட்ட மகளிரணி கவுன்சிலர் சண்முகப்ரியா, திருமலை குமணன், பிரவீன், மேனாள் கவுன்சிலர் விவசாய அணி கருப்பணன் , ஐடி விங் தமறாக்கி அம்பலம், ஹனீபா, டி. ஆர். சேகர், ஈஷ்வரன், அண்ணாமலை, வழக்கறிஞர் பில்லூர் கார்த்திக், முடிகண்டம் அனந்தக்குமார் , கல்லல் நஸீர், இலக்கிய அணி திருமலை மணிமாறன்,வேங்கை பிரபாகரன், வாகுளத்துபட்டி சரவணன்,. கீழப்பூங்குடி மா. தினகரன் , கிளைச்செயலாளர் சித. இராமநாதன் , மீ. முருகானந்தம் , திருமலை கிட்டு, அறங்காவலர் மாணவரணி கார்த்திக், செம்புக்குட்டி, சந்தானம், பாலாஜி, அய்யனார் , இராஜராஜன், இராஜேந்திரன், பையூர் சுகுமார் உள்ளிட்ட சிவகங்கை வடக்கு ஒன்றியக்கழக, கிளைக்கழக திமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.


உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM

# மதுரையில் ஜீன் முதல் வாரத்தில் தி.மு.க. பொதுக்குழுவை கூட்ட திட்டம்

சென்னை, ஏப்.14

இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், ஆண்டுக்கு 2 முறை செயற்குழுவையும், ஒருமுறை பொதுக்குழுவையும் கூட்ட வேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது. அந்த வகையில், ஒவ்வொரு கட்சிகளும் செயல்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், அடுத்த ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதம் தமிழகத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. அரசியல் கட்சிகள் எல்லாம் இப்போதே கூட்டணி பேச்சு வார்த்தையை தொடங்கிவிட்டன. பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க., பா.ஜ.க.வுடன் கூட்டணியை உறுதி செய்துள்ளது.

இந்த நிலையில், ஆளுங்கட்சியான தி.மு.க.வும் தேர்தல் பணிகளை இப்போதே தொடங்கிவிட்டன. வரும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் மதுரையில் கட்சியின் பொதுக்குழுவை கூட்ட தி.மு.க. தலைமை திட்டமிட்டு வருகிறது.

இந்தக் கூட்டத்தில், அரசியல் ரீதியாகவும், சட்டசபை தேர்தலை எதிர்கொள்ளும் வகையிலும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. மேலும், சட்டசபை தேர்தல் தொடர்பாக தி.மு.க நிர்வாகிகளுக்கு பல்வேறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட உள்ளது. பொதுக்குழு கூட்டத்துக்கு பிறகு சட்டமன்ற தேர்தல் பணிகளில் மேலும் வேகம் காட்ட தி.மு.க.தலைமை முடிவு செய்துள்ளது.

# திருநெல்வேலி: எஸ்.பி., போலீஸ் கமிஷனர் அலுவலகங்களில் "சமத்துவ நாள்" உறுதி மொழி





திருநெல்வேலி ஏப்.14

திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. அலுவலகத்தில் நேற்று எஸ்.பி. சிலம்பரசன் தலைமையில் காவல் துறையினர் "சமத்துவ நாள்" உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். இதேபோல் நெல்லை மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹாதிமணி தலைமையில் மாநகர போலீஸ் துணை கமிஷனர்கள் வினோத் சாந்தாராம் (கிழக்கு), விஜயகுமார் (தலைமையிடம்) மற்றும் காவல் துறையினர் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

மேற்சொன்ன நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட காவல் துறையினர் அனைவரும், "சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும், சாதிகளின் பெயரால் நடக்கும் சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகவும், தொடர்ந்து போராடி, ஒதுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளுக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுடைய சமத்துவத்திற்காகவும், வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்து, எளிய மக்களின் உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டிய, நம் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளில், சாதி வேறுபாடுகள் ஏதுமில்லாத சமத்துவ சமுதாயத்தை அமைக்க நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும், சக மனிதர்களைச் சாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காணமாட்டேன் என்றும், சக மனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிப்பேன் என்றும் உளமார உறுதி ஏற்கிறேன்" என்று உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

# விருதுநகரில் ராட்டினத்தில் இருந்து திடீரென பெண் தவறி விழுந்து விபத்து



விருதுநகர், ஏப்.14

விருதுநகரில் ராட்டினத்தில் இருந்து திடீரென கவுசல்யா (வயது 22) என்ற பெண் தவறி விழுந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பங்குனி பொங்கலை ஒட்டி தனியார் பள்ளியில் நடைபெற்று வரும் பொருட்காட்சியில் இந்த விபத்து நடந்துள்ளது.

கீழே விழுந்ததில் பலத்த காயம் அடைந்த கவுசல்யாவை மீட்ட பொருட்காட்சி நிர்வாகத்தினர் மற்றும் ஊழியர்கள் பொருட்காட்சியில் தயார் நிலையில் பாதுகாப்புக்கு வைக்கப்பட்டிருந்த தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இச்சம்பவம் குறித்து ராட்டினம் இயக்கும் நிர்வாகியிடம் விருதுநகர் மேற்கு காவல் நிலைய போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருத்துறைப்பூண்டி: கனமழையில் சுவர் இடிந்து விழுந்து ஒருவர் பலி



திருவாரூர் ஏப்.14

திருவாரூர் மாவட்டத்தில் கனமழை கொட்டித் தீர்த்தது. அதிகபட்சமாக திருத்துறைப்பூண்டியில் 7.6 செ.மீ அளவு மழை பதிவாகியுள்ளது. மேலும் மன்னார்குடியில் 6.5 செ.மீ, குடவாசலில் 4.7 செ.மீ, நீடாமங்கலத்தில் 4.1 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

இந்த நிலையில் திருத்துறைப்பூண்டி அருகே பெய்த கனமழையில் வீட்டின் சுவர் இடிந்து விழுந்து ஒருவர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. மடப்புரம் ஆட்டூர் சாலையில் கூரை வீட்டில் வசித்து வந்தவர் கட்டட தொழிலாளி ஆனந்தராஜ். இவரது வீட்டின் சுவர் கனமழையில் இடிந்து விழுந்தது. இதில் உடல் நசுங்கி ஆனந்தராஜ் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து தகவலறிந்து வந்த போலீசார், அவரது உடலை மீட்டு திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கண் தான வள்ளலுக்கு ஊரே கூடி அஞ்சலி



திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுக்கா கச்சனம் சன்னதி தெருவில் வசிக்கும் பாலு அவர்களின் துணைவியாரும், சென்னை கூல்ஸ் உரிமையாளர் ஆர்.பி. கண்ணன், தலைமை யாசிரியை விமலா ஆகியோரின் தாய் பாலாமணி அவர்கள் தான் இறப்பதற்கு முன்பே அனைவருக்கும் கண் தான விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தனது கண்களை ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் மூலம் கண் தானம் செய்ய விருப்பம் தெரிவித்து இருந்தார். அவர் 11.04.2025 அன்று இரவு இயற்கை எய்தியை முன்னிட்டு அவரது குடும்ப உறுப்பினர்களின் அனுமதியுடன் அவரது கண்களை ராய் ட்ரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவனத் தலைவர் முனைவர் துரை ராயப்பன் அவர்கள் ஏற்பாட்டின் பேரில் , தமிழரசன், கண் வங்கி நுட்பனர் மதுரை அரவிந் கண் மருத்துவமனை உதவியோடு கண்களை தானமாக பெற்று மதுரை அரவிந்த் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த ஊரில் இதுவே முதல் கண்தானம். எனவே ஊரே கூடி அவருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். இது பற்றி ராய் டிரஸ்ட் நிறுவனர் முனைவர் துரை ராயப்பன் பேசுகையில் கண் தானம் என்பது ஒரு நற்பணியாகும். கண்தானம் செய்வதன் மூலம் பார்வை இழந்தோரின் வாழ்க்கையில் ஒரு புதிய ஒளி ஏற்படுத்தி, அவர்களுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை அளிக்கலாம். எனவே, கண் தானம் பற்றி விழிப்புணர்வை மக்களிடையே கொண்டு செல்வது அவசியமாகும். இந்தியாவில் சுமார் 2.21% மக்கள் சரியான பார்வை இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் . கண் தானம் அனைவரும் செய்தால், இந்தியாவில் பார்வையற்றோ சதவிகிதம் வெகுவாக குறையும். கச்சனம் சன்னதி தெருவில் கண் தானம் விழிப்புணர்வை மறைந்தும் அமரர் பாலாமணி விதைத்து சென்றுள்ளார் என்று முனைவர் துரை ராயப்பன் கூறினார். இனிவரும் காலங்களில் அந்த பகுதியில் அனைவரும் கண்தானம் செய்வார்கள் என்று நம்புவோம் என லியோ கன்ஸ்ட்ரகடர் உரிமையாளர் கே கே வி செல்வம் தெரிவித்தார்.

# எழும்பூர் ரெயில் நிலையத்தில் பயணியிடம் நூதன திருட்டு வாலிபர் கைது

சென்னை, ஏப்.14

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் கடந்த 10ந் தேதி ஸ்ரீதர் என்பவர் ராமேஸ்வரம் செல்வதற்காக எக்ஸ்பிரஸ் ரெயில் ஒன்றின் முதலாம் வகுப்பு குளிர்சாத பெட்டியில் அமர்ந்து இருந்தார். அப்போது, அங்கு வந்த வாலிபர் ஒருவர், நான் ஆன்லைனில் உணவு ஆர்டர் செய்துள்ளேன். ஆனால், அதற்கான பணம் என்னிடம் இல்லை. நீங்கள் ஜீபே மூலம் பணம் கொடுத்தால் நான் திருப்பி கொடுத்துவிடுவேன் என கூறியுள்ளார்.

இதனை நம்பிய ஸ்ரீதர், ஆன்லைன் மூலம் அந்த நபருக்கு ரூ.1,000 அனுப்பியுள்ளார். பணம் கிடைத்த சிறிது நேரத்தில் அந்த வாலிபர், தண்டவாளத்தில் குதித்து மற்றொரு நடைமேடையில் ஏறி தப்பி ஓடி விட்டார். இதனால் செய்வதறியாது திகைத்து நின்ற ஸ்ரீதர், எழும்பூர் ரெயில்வே போலீஸ் நிலையத்திற்கு சென்று நடந்ததை கூறி புகார் அளித்தார்.

புகாரின் அடிப்படையில், போலீசார் வழக்குப் பதிவு செய்து, ரெயில் நிலையத்தில் இருந்த கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தனர். அதன் அடிப்படையில், ஆந்திர மாநிலம் திருப்பதி பகுதியை சேர்ந்த விஷ்ணு (29) என்பவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட வாலிபர் ஏற்கனவே, தனியார் உணவு டெலிவரி நிறுவனத்தில் வேலை செய்யும் போது, பல லட்சம் ரூபாய் மோசடி செய்தது விசாரணையில் தெரிய வந்தது. இதனையடுத்து விஷ்ணுவை கோர்ட்டு உத்தரவின் பேரில் போலீசார் சிறையில் அடைத்தனர்.

# பா.ஜ.க.வில் எந்தப் பொறுப்பும் இல்லை: விஜயதாரணி ஏமாற்றம்?



சென்னை, ஏப்.14

காங்கிரஸ் கட்சியின் கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில் தொடர்ந்து 3வது முறையாக எம்.எல்.ஏவாக தேர்வான விஜயதாரணி, தனது எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு, பா.ஜ.கவில் இணைந்தார். தற்போதுவரை அவருக்கு கட்சியில் பதவி வழங்கப்படாத நிலையில், விஜயதாரணி அதிருப்தி அடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் விஜயதாரணி பா.ஜனதாவில் தன்னை இணைத்து கொண்டார். இதனால், அவரின் சட்டசபை உறுப்பினர் பதவி பறிபோனது. இதன்பிறகு, தமிழக பா.ஜனதாவில் அவருக்கு பொறுப்புகள் வழங்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பு எழுந்தது. சமீபத்தில், மத்திய மந்திரி அமித்ஷாவை டெல்லிக்கு சென்று, விஜயதாரணி நேரில் சந்தித்தார். கட்சி பொறுப்பு தொடர்பாக அவர் அமித்ஷாவிடம் வலியுறுத்தியாக அப்போது பேசப்பட்டது. ஆனால், தற்போது வரையில் பா.ஜனதாவில் விஜயதாரணிக்கு பொறுப்புகள் ஏதும் வழங்கப்படவில்லை. இந்த நிலையில், சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், விஜயதாரணியும் கலந்து கொண்டார்.

தேசிய பொதுக்குழு உறுப்பினர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்கள் நிகழ்ச்சியில் அறிவிக்கப்பட்டன. அதிலும், விஜயதாரணியின் பெயர் இடம் பெறவில்லை. இதனால், அவர் ஏமாற்றம் அடைந்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய விஜயதாரணி, "விரைவில் பதவியோ பொறுப்போ வழங்கப்படும் என்று, மேலிடமும், கட்சியும் உறுதி அளித்திருக்கிறது. நிச்சயமாக அதற்கு உண்டான செய்தி உங்களை வந்து சேரும். ஏற்கனவே அதிருப்தி தெரிவித்திருந்தேன். இனிமேல் அதிருப்தி வராத அளவுக்கு உறுதி அளித்திருக்கிறார்கள். உறுதியாக, நிச்சயமாக நல்ல பதவி வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள எம்.எல்.ஏ நயினார் நாகேந்திரனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். அவரது நீண்டகால அனுபவம் வாய்ந்த அரசியல்பயணம் பா.ஜ.க.வை வழிநடத்தக்கூடிய பொறுப்பு அவர் முன் வைக்கப்பட்டுள்ளது. 2026 தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை பெற்று தருவார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை" என்று அவர் கூறினார்.

# பாஜகவுடன் கூட்டணி சேரமாட்டோம் என்று கூறிய ஜெயலலிதாவுக்கே துரோகம் செய்துவிட்டார்கள்: திருமாவளவன் விமர்சனம்



சென்னை, ஏப்.14

பாஜகவுடன் கூட்டணி சேரமாட்டோம் என்று கூறிய ஜெயலலிதாவுக்கே துரோகம் செய்துவிட்டார்கள் என விசிக தலைவர் திருமாவளவன் விமர்சனம் செய்துள்ளார்.

நெருக்கடி கொடுத்து அதிமுகவை பணிய வைத்துள்ளது பாஜக

நெருக்கடி கொடுத்து பாஜக அதிமுகவை கூட்டணிக்கு பணிய வைத்துள்ளது.

பாஜக நெருக்கடிக்கு பணிந்துவிட்டார் பழனிசாமி”

பாஜகவுடன் அதிமுக சேர்ந்ததற்கு பல்வேறு நெருக்கடிகளும் காரணம். பாஜகவுடன் கூட்டணி அமைத்ததற்கு அதிமுகவுக்கு பின்னடைவே ஏற்படும்.

ஜெயலலிதாவுக்கு துரோகம் செய்துவிட்டார் எடப்பாடி

பாஜகவுடன் கூட்டணி சேரமாட்டோம் என்று கூறிய ஜெயலலிதாவுக்கே துரோகம் செய்து விட்டார்கள். அதிமுக உடனான கூட்டணி பாஜகவுக்கு மட்டுமே பலனளிக்கும். தமிழ்நாட்டில் பாஜக காலூன்ற முடியாது; அதிமுகவை அழிக்க பாஜக செய்யக் கூடிய சதி முயற்சியில் இதுவும் ஒன்று.

# தமிழ் புத்தாண்டையொட்டி, சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்கு புறப்பட்ட மக்கள்



சென்னை, ஏப்.14

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு சென்னை மற்றும் புறநகர் பகுதியில் வசிக்கும் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த பொதுமக்கள் தங்களது சொந்த ஊருக்கு செல்வதற்காகவும், பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலை கிரிவலம் செல்வதற்காக நேற்று கிளாம்பாக்கம் புறநகர் பஸ் நிலையத்தில் ஏராளமான பயணிகள் குவிந்தனர்.

பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கும், தமிழ்புத்தாண்டை முன்னிட்டு பல்வேறு மாவட்டங்களுக்கு அரசு சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன. இதனால் பொதுமக்கள் சிரமமின்றி பஸ்களில் ஏறி சென்றதை காண முடிந்தது.

பஸ் நிலையத்தில் கூட்டம் அலைமோதிய காரணத்தால் கூடுவாஞ்சேரி உதவி போலீஸ் கமிஷனர் ராஜு பிரின்ஸ் ஆரோன் தலைமையில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

மேலும் பயணிகளின் வசதிக்காக பல்வேறு இடங்களில் ஒலிபெருக்கி மூலம் சிறப்பு பஸ்களின் வருகை குறித்து போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்து கொண்டிருந்தனர். ஏராளமானோர் தங்களது சொந்த ஊருக்கு சென்றதால், சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்கள் அணிவகுத்து மெதுவாக ஊர்ந்து சென்றதை காண முடிந்தது.

# கன்னியாகுமரி கண்ணாடி பாலத்தில் செல்ல சுற்றுலா பயணிகளுக்கு தடை



கன்னியாகுமரி ஏப்.14

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் நினைவுப் பாறையையும் இணைக்கும் வகையில் ரூ.37 கோடி செலவில் கண்ணாடி கூண்டுப் பாலம் கட்டப்பட்டு, திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தினை முன்னிட்டு திறக்கப்பட்டது. கடலுக்கு மேலே மிதந்து செல்லும் வகையிலான தோற்றத்தைக் கொடுக்கும் இந்தக் கண்ணாடி இழைக் கூண்டுப் பாலம் திறக்கப்பட்டதிலிருந்து இதில் நடந்து செல்ல சுற்றுலாப் பயணிகள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த நிலையில், கண்ணாடி கூண்டு பாலம் ஆய்வு பணி மற்றும் பராமரிப்பு பணி வரும் 15ம்தேதி முதல் 19ம்தேதி வரை நடைபெற உள்ளது. இதனால் 5 நாட்களுக்கு கண்ணாடி பாலத்திற்கு பொதுமக்கள் செல்ல அனுமதிக்க படமாட்டார்கள். எனவே கன்னியாகுமரிக்குவருகை தரும் சுற்றுலா பயணிகள் இதை கருத்தில் கொண்டு தங்களுடைய பயணத்திட்டத்தை மேற்கொள்ளுமாறு மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார்.

# தமிழில் பெயர்ப்பலகை இல்லாத நிறுவனங்களுக்கு ரூ.2 ஆயிரம் அபராதம்: அமைச்சர் சாமிநாதன் எச்சரிக்கை



திருப்பூர், ஏப்.14

திருப்பூரில் செய்தியாளர்களை சந்தித்தபோது தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் சாமிநாதன், "தமிழகத்தில் உள்ள வணிக நிறுவனங்கள், ஓட்டல்கள், கடைகளில் பெயர் பலகை வைக்கும் போது தமிழில் வைக்க வேண்டும். தமிழில் பெயர்ப்பலகை வைக்காத நிறுவனங்களுக்கு மே மாதம்முதல்ரூ.2ஆயிரம் அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்கப்படும்" என எச்சரிக்கை விடுத்தார்.

# வார விடுமுறை: கொடைக்கானலில் குவிந்த சுற்றுலா பயணிகள்




திண்டுக்கல், ஏப்.14

'மலைகளின் இளவரசி'யான கொடைக்கானலுக்கு தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். குறிப்பாக, வார விடுமுறை தினங்களில் சுற்றுலா பயணிகளின் வருகை மேலும் அதிகமாகவே இருக்கும்.

அந்த வகையில் வார விடுமுறை தினமான இன்று கொடைக்கானலில் சுற்றுலா பயணிகள் குவிந்த வண்ணம் உள்ளனர். வனப்பகுதியில் உள்ள குணா குகை, பில்லர் ராக், பைன்மரக் காடு, மோயர் பாயிண்ட், பசுமை பள்ளத்தாக்கு, பேரிஜம் ஏரி, மன்னவனூர் சூழல் சுற்றுலா மையம் உள்ளிட்ட பகுதிகளில் சுற்றுலா பயணிகள் குவிந்துளனர்.

இதேபோல் நட்சத்திர ஏரியில் படகு சவாரி செய்தும், ஏரிச்சாலையில் குதிரை மற்றும் சைக்கிள் சவாரி செய்தும் சுற்றுலா பயணிகள் உற்சாகம் அடைந்தனர். மேலும் பிரையண்ட் பூங்காவில் குவிந்த சுற்றுலா பயணிகள், அங்குள்ள புல்தரைகளில் அமர்ந்து குடும்பத்தினருடன் செல்பி புகைப்படங்கள் எடுத்துக் கொண்டனர்.

அதேவேளை, வாரவிடுமுறை தினம் என்பதால் அதிக எண்ணிக்கையில் சுற்றுலா பயணிகள் குவிந்ததால் கொடைக்கானலில் சுமார்3கிலோமீட்டர் தூரத்திற்கு வாகனங்கள் வரிசை கட்டி நின்றன. நாளை ஞாயிற்றுக்கிழமையும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலா பயணிகளின் வருகையால் கொடைக்கானலில் வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# பைக் மீது கார் மோதி தம்பதி பரிதாப பலி மகன் படுகாயம்

நெல்லை, ஏப்.15
தூத்துக்குடி மாவட்டம் முறப்பநாடு அருகே ஆறாம்பண்ணையை சேர்ந்தவர் பாதாளமுத்து(45). இவர், மனைவி கோதைநாச்சியார்(43), மகன் மகேஷ்(16) ஆகியோருடன் நேற்று முன்தினம்இரவுபங்குனி உத்திர விழாவையொட்டி பாளை அருகில் உள்ள குலதெய்வ கோயிலுக்கு பைக்கில் சென்றுள்ளார். வி.எம்.சத்திரம் பஸ் நிறுத்தம் அருகே எதிரே வந்த கார், பைக் மீது மோதியது. இதில் பாதாளமுத்து, கோதை நாச்சியார் இறந்தனர். மகன் மகேஷ் படுகாயம் அடைந்தார்.

# பக்தரை ஆவேசமாக திட்டிய திருச்சி டிஎஸ்பிக்கு “மெமோ”



திருச்சி, ஏப்.14
திருச்சி வயலூர் முருகன் கோயிலில் பங்குனி உத்திரவிழா தொடங்கி 5 நாட்கள் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், ஜீயபுரம் டிஎஸ்பி பழனி தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் வரிசையில் சென்ற பக்தர்கள் மத்தியில் ஒரு பக்தர் திடீரென இடையில் புகுந்து செல்ல முயன்றதாக தெரிகிறது. அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த ஜீயபுரம் டிஎஸ்பி பழனி அவரை ‘‘ஒழுங்கா வாடா’’, ’’ஒழுக்கமா நடந்துக்கடா” ‘‘செருப்பால அடிப்பேன்’’ போன்ற வார்த்தைகளால் ஒருமையில்திட்டிபேசும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இதையடுத்து, திருச்சி மாவட்ட எஸ்பி செல்வநாகரத்தினம், டிஎஸ்பி பழனிக்கு மெமோ கொடுத்துள்ளார்.

# ஈஸ்டர் திருவிழாவின் முன்னோட்டமாக குருத்தோலை ஞாயிறு பவனி



சென்னை, ஏப்.14
கிறிஸ்தவர்களின் தவக்காலம்தொடங்கி 5 வாரங்கள் முடிவடந்த நிலையில்இன்றுகுருத்தோலை ஞாயிறு வழிபாடு கடைபிடிக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்து ஜெருசலேம் நகருக்குள் நுழையும்போது அவருக்கு மக்கள் கொடுத்த ஆரவார வரவேற்பு நிகழ்ச்சிதான் இந்த குருத்தோலை ஞாயிறுநிகழ்ச்சி.பாஸ்கா விழாவுக்காக இயேசு கிறிஸ்து ஜெருசலேம் நகருக்குள் வரும்போது அவருக்கு குருத்தோலைகளை விரித்து யூத மக்கள் வரவேற்பு அளித்தனர். கைகளில் ஒலிவ மரத்தின் இலைகளை வைத்து வாழ்த்து தெரிவித்தனர்.

இதை நினைவு கூறும் வகையில் தவக்காலத்தின் 6வது ஞாயிற்று கிழமையை உலகம் முழுவதும் கிறிஸ்தவர்கள் குருத்தோலை ஞாயிறாக கடை பிடிக்கிறார்கள். இதையடுத்து, இன்று காலை அனைத்து ஆலயங்களிலும் கிறிஸ்தவர்கள் ஒன்று கூடி குருத்தோலைகளை கையில் ஏந்தி பவனியாக வருவார்கள். அப்போது, தாவீதின் மகனுக்குஓசன்னாஎன்று வாழ்த்து பாடல்களை பாடுவார்கள். இந்த நிகழ்ச்சி சென்னையில் உள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களிலும் காலை 7 மணி முதல் தொடங்கும். இயேசு உயிர்த்த நாளின் வருகையை வெளிக்காட்டும் நிகழ்வாக இந்த குருத்தோலை பவனி கடைபிடிக்கப்படுகிறது.

# திருமா பயிலகத்தின் சார்பில் குரூப் தேர்வுக்கு 27ம்தேதி முதல் கட்டணமில்லா பயிற்சி வகுப்பு




சென்னை ஏப்.14
குரூப் தேர்வுகளுக்கு திருமா பயிலகத்தின் சார்பில் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் வரும் 27ம் தேதி முதல் நடைபெற உள்ளது. இது தொடர்பாக திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கை: சென்னை, அசோக் நகர், அம்பேத்கர் திடலில் இயங்கிவரும் ‘திருமா பயிலகத்தின்’ மூலம் அரசு வேலைவாய்ப்புகளுக்கான பயிற்சி வகுப்புகளை கட்டணமின்றி கடந்த சில ஆண்டுகளாக நடத்தி வருகிறோம். இந்த பயிலகத்தில் பயிற்சி பெற்ற பலர், அரசு நடத்தும் போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். திறன் வாய்ந்த பயிற்றுநர்களைக் கொண்டு பயிலகத்தில் வரும் 27ம் தேதி காலை 9 மணிக்கு டிஎன்பிஎஸ்சி மற்றும் எஸ்.ஐ. தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் மீண்டும் தொடங்க உள்ளன. மேலும், பயிற்சி வகுப்புகள் மற்றும் தேர்வுத் தொடரில் கலந்து கொள்ள விரும்புவோர், அலைபேசி (8610392275), மின்னஞ்சல் (thirumapayilagam@gmail.com) ஆகியவற்றின் மூலம்தொடர்புகொண்டு பயிலகத்தில் சேர்ந்து பயன்பெற வேண்டும்.

# தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகம் கோரிக்கை பிளஸ் 2 விடைத்தாள் திருத்தும் பணிக்கு விடுமுறை வேண்டும்

சென்னை, ஏப்.14
தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழக பொதுச் செயலாளர் அன்பழகன் வெளியிட்ட அறிக்கை விவரம்: தமிழகத்தில் பிளஸ் 2 பொதுத் தேர்வு விடைத்தாள் திருத்துதல் பணிகள் கடந்த ஏப்ரல் 4ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகின்றன. இதற்கிடையே கிறிஸ்தவ பண்டிகையான புனித வெள்ளி ஏப்ரல் 18ம் தேதியும், ஈஸ்டர்டே ஏப்ரல் 20ம் தேதியும் கொண்டாடப் படவுள்ளன. இதற்கு இடைபட்ட ஏப்ரல் 19ம் தேதி விடைத்தாள் திருத்துதல் பணி நடைபெறவிருக்கிறது.

இதனால் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றும் ஆசிரியர்கள் தங்களின் சொந்த ஊருக்கு சென்று பண்டிகையை கொண்டாட முடியாத சூழல் நிலவுகிறது.

இந்நிலையை உணர்ந்து ஏப்ரல் 19ம் தேதி விடைத்தாள் திருத்துதல் பணிக்கு விடுமுறை அளிக்க வேண்டும்.

இது ஆசிரியர்கள் தங்களின் குடும்பத்தினருடன் பண்டிகையை சிறந்த முறையில் கொண்டாட உதவும்.

மேலும், மற்ற ஆசிரியர்களுக்கும் தொடர்ந்து பணிகளுக்கு சிறு ஓய்வு கிடைக்கும். அவை அடுத்து வரும் நாட்களில் ஆசிரியர்கள் புத்துணர்ச்சியுடன் பணி புரிவதற்கு வழிவகுக்கும்.

எனவே, ஏப்ரல் 19ம் தேதி சனிக்கிழமை விடைத்தாள் மதிப்பீட்டு முகாமுக்கு விடுமுறை அளிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தாய் வீட்டுக்கு சென்று திரும்பி வராததால் ஆத்திரம்.. மனைவியை குத்திக்கொன்ற வாலிபர்

நாகப்பட்டினம் ஏப்.14
புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்டம் திருநள்ளாறு சொரக்குடி தெற்குபேட்டை சோழியன் திடல் பகுதியை சேர்ந்தவர் ஜெயராஜ். இவரது மகன் ராமராஜன் (வயது 30). கூலித்தொழிலாளி. இவரது மனைவி ஈஸ்வரி (28). ஏற்கனவே திருமணமாகி தனது கணவரை பிரிந்த நிலையில் தனது 3 மாத குழந்தையுடன் இருந்த ஈஸ்வரிக்கு, ராமராஜனுடன் இரண்டாவது திருமணம் நடந்து 10 ஆண்டுகள் ஆகிறது. ராமராஜன் மூலம் ஈஸ்வரிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

இவர்கள் இருவரும் தற்போது தங்கள் மகன்கள் பிரேம் (11), கிர்த்தின் (9) ஆகியோருடன் சொரக்குடியில் வசித்து வந்தனர். இந்த நிலையில் ஈஸ்வரியின் தந்தை இறந்து 30ம் நாள் துக்க நிகழ்ச்சிக்காக தனது சொந்த ஊரில் உள்ள தனது தாய் வீட்டிற்கு ஈஸ்வரி சென்றார். தாய் வீட்டிற்கு சென்று 10 நாட்கள் ஆகியும் மனைவி வீட்டிற்கு திரும்பி வராததால் ராமராஜன் கடும் ஆத்திரம் அடைந்தார். இதனால் மனைவியை அழைத்துவர அவர் வாழ் மங்கலத்திற்கு சென்றார்.

அப்போது அங்கு கணவன்மனைவி இடையே வாய்த்தகராறு ஏற்பட்டது. இதில் ஆத்திரம் அடைந்த ராமராஜன், தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் மனைவி ஈஸ்வரியை 10க்கும் மேற்பட்ட இடங்களில் சரமாரியாக குத்தினார். இதில் பலத்த காயம் அடைந்த ஈஸ்வரி ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து ராமராஜனை கைது செய்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# அமைச்சர் பொன்முடியின் சர்ச்சை பேச்சுக்கு கவர்னர் மறைமுகமாக கண்டனம்

மதுரை, ஏப்.14
மதுரை திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கவர்னர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டு பேசியதாவது;

வடமொழியில் வால்மீகி எழுதிய கம்பராமாயணத்தில் சீதையை தூக்கிச் சென்றார் என எழுதியிருப்பார். ஆனால், இங்கே கம்பர் பெண்களை கண்ணியத்துடன் எழுதி இருப்பார். இந்த ஊரில் உயர்பொறுப்பில்இருக்கும் நபர் பெண்களை மிகவும் மோசமாக பேசியுள்ளார். அது மிகவும் கண்டனத்திற்குரியது.

அவரை நான் மரியாதைக் குறைவாக பேச மாட்டேன்,இவர்கள் சிவ, விஷ்ணு பக்தர்களின் நம்பிக்கையை காலில் போட்டு மிதிக்கும் விதமாக பேசியுள்ளார். மலேரியா, டெங்கு கொசுக்கு இணையாக சனாதனத்தை கூறியவர்களிடமிருந்து என்ன எதிர்பார்ப்பது. கம்பர் பாடத்தை கல்விச்சாலைக்குள் ஒரு பாடமாக படிக்க தேவை உருவாக்க வேண்டும். இதுவே கம்பருக்கு நாம் செய்யும் அஞ்சலி"

இவ்வாறு கவர்னர் ஆர். என். ரவி பேசினார்.

# அதிமுக - பாஜக கூட்டணி குறித்து கருத்து இல்லை - பிரேமலதா விஜயகாந்த்



சென்னை, ஏப்.14
தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடம் உள்ளது; நாங்கள் இந்த முறை மிகவும் யோசித்து நிதானமாகத்தான் முடிவெடுப்போம் என்று தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார். மேலும் பாஜக கூட்டணிக்கு செல்வது குறித்து அதிமுக தரப்பில் இருந்து பாஜக கூட்டணி கட்ட ஆலோசிக்கப்பட்டதா என்ற கேள்விக்கு, எங்களிடம் யாரும் ஆலோசிக்கவில்லை, நாங்களும் யாருடனும் பேசவில்லை என்றார். மேலும், “அதிமுக – பாஜக கூட்டணி குறித்து கருத்து கூற விரும்பவில்லை.அடுத்த 6 மாதங்களுக்கு எங்களது வளர்ச்சி பற்றி மட்டுமே யோசிப்போம்,”எனத் தெரிவித்தார்.

# ஓபிஎஸ்.க்கு கோவையில் ஆயுர்வேத சிகிச்சை



கோவை. ஏப்.14
: கோவை கணபதியில் இயற்கை நல மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனைக்கு முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் அடிக்கடி வந்து சிகிச்சை பெற்று செல்வது வழக்கம். இதேபோல், நேற்று கோவை வந்த ஓ. பன்னீர்செல்வம், கணபதிக்கு சென்று அங்குள்ள இயற்கை நல மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இங்கு நீராவி குளியல், மசாஜ் உள்ளிட்ட சிகிச்சைகள் அவருக்கு அளிக்கப்படும். இன்னும் 2 அல்லது 3 நாட்கள் அவர் அங்கு தங்கி சிகிச்சை பெறுவார் என தெரிய வந்துள்ளது.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா முன்னிலையில்,அதிமுக பாஜக கூட்டணி உறுதி செய்யப்பட்டது. வழக்கமாக பாஜ மேலிட தலைவர்களை சந்திக்கும் ஓ. பன்னீர்செல்வம் நேற்று அமித்ஷா சந்திப்பை தவிர்த்துவிட்டு, கோவையில் இயற்கை நல சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# பத்ம பூஷண் மற்றும் பத்மஸ்ரீ விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம்: யுஜிசி அறிவிப்பு




சென்னை, ஏப்.14
கல்வி, கலை, மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு 2026ம் ஆண்டு பத்ம பூஷண் மற்றும் பத்மஸ்ரீ விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம் என யுஜிசி தெரிவித்துள்ளது. இதுகுறித்து பல்கலைக்கழக மானியக் குழு(யுஜிசி) செயலர் ஆர்.மணிஷ் ஜோஷி, அனைத்து உயர் கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை விவரம்: 2026ம் ஆண்டு பத்ம விருதுக்கான விண்ணப்பங்கள், பரிந்துரைகள் வரவேற்கப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. விருப்பமுள்ளவர்கள் https://awards.gov.in/ எனும் இணைய தளத்தில் ஜூலை 31ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

இனம், தொழில், பதவி அல்லது பாலின வேறுபாடு இல்லாமல் அனைவரும் இந்த விருதுகளுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர். இந்த விருதுகளுக்கான பரிந்துரைகளைநாடு முழுவதும் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள் இணைய வழியில் அனுப்பலாம். விளம்பரத்துக்காக அல்லாமல் அந்தந்த துறைகளுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கியவர்களை கண்டறிந்து விண்ணப்பிக்க அறிவுறுத்த வேண்டும். தன்னலமின்றி பொதுமக்களுக்கு சேவையாற்றுவோருக்கு முன்னுரிமை அளிப்பது அவசியம். கல்வி நிறுவனங்களின் சார்பில் பரிந்துரைக்கப்படுபவர் ஆற்றிய சாதனைகள்,சேவைகள்குறித்து 800 வார்த்தைகளுக்கு மிகாமல் குறிப்பிடப்பட வேண்டும். மேலும், அந்தநபர் பரிந்துரை செய்யப்படுவதற்கான காரணத்தை அது தெளிவாக விளக்க வேண்டும். பத்ம விருதுகளுக்கான விதிகள், வழிகாட்டுதல்கள் https://www.padmaawards.gov.in/ என்ற வலைத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கல்வி உதவித்தொகைக்கான என்எம்எம்எஸ் தேர்வு முடிவுகள் வெளியீடு

சென்னை, ஏப்.14
மத்திய அரசின் தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்பு உதவித் தொகைத் திட்டத்தின் (என்எம்எம்எஸ்) கீழ் அரசு, அரசு உதவி பள்ளிகளில் 8ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை அளிக்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டுக்கான என்எம்எம்எஸ் தேர்வு கடந்த பிப்ரவரி 22ம் தேதி நடத்தப்பட்டது.

2 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் எழுதினர். தேர்வு முடிவுகளை நேற்று வெளியானது. அவற்றை மாணவர்கள், பெற்றோர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் சென்று அறிந்து கொள்ளலாம்.

மேலும், இத்தேர்வுக்கான ஊக்கத் தொகை பெறுவதற்கு தகுதி பெற்ற 6,695 மாணவர்களின் விவரப் பட்டியலும் மேற்கண்ட வலைத்தளத்திலே வெளியிடப்பட்டுள்ளதாக தேர்வுத் துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.

# நிபுணர் குழுவின் ஒப்புதலை பெற்ற பிறகே கோயில் திருப்பணிகளை மேற்கொள்ள வேண்டும்: அறநிலையத்துறைக்கு ஐகோர்ட் உத்தரவு



சென்னை. ஏப்.15
மண்டல மற்றும் மாநில அளவிலான நிபுணர் குழுக்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகே கோயில்கள் சீரமைப்பு, கோபுர கட்டுமான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறநிலையத்துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் தாலுகாவில் உள்ள மாக்கம்பாளையம் கிராமத்தில் உள்ள பத்ரகாளியம்மன் கோவில் குடமுழுக்கு நடத்த அனுமதி வழங்குமாறு அறநிலையத் துறைக்கு உத்தரவிடக் கோரி கோவில் அறங்காவலர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அவர் தாக்கல் செய்த மனுவில், கோவில் சீரமைப்பு பணிகளையும், ராஜ கோபுர கட்டுமான பணிகளையும் மேற்கொண்டு, குடமுழுக்கு தேதி அறிவித்து இருந்த நிலையில் திடீரென குடமுழுக்கு நடத்தஅனுமதி மறுத்து அறநிலையத் துறை உத்தரவு பிறப்பித்து உள்ளது. எனவே, அந்த உத்தரவை ரத்து செய்து குடமுழுக்கு நடத்த அனுமதிக்க வேண்டும் என்று கோரியிருந்தார். இதேபோல் கோயில் பூசாரி சிவராஜ், திருப்பணிக் குழு அமைத்து அதில் தன்னையும் சேர்த்து குடமுழுக்கு நடத்த உத்தரவிடக் கோரி வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்குகள் நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, அறநிலையத் துறை தரப்பில் ஆஜரான சிறப்பு அரசு வழக்கறிஞர் அருண் நடராஜன், உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மண்டல, மாநில நிபுணர் குழுக்களின் அனுமதி பெறாமல் கோயில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் கோவில் குடமுழுக்கு நடத்த அனுமதி மறுக்கப்பட்டது. இரு நிபுணர் குழுக்களின் அனுமதியை பெற்று சீரமைப்பு பணிகளை ஆய்வு செய்து, மீண்டும் குடமுழுக்கு நடத்த 60 நாட்கள் அவகாசம் தேவைப்படும் என்று தெரிவித்தார். இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, உயர்நீதிமன்ற உத்தரவின்படி நிபுணர் குழுக்களின் அனுமதியை பெற்றே கோயில் சீரமைப்பு,

கோபுர கட்டுமான பணிகளை மேற்கொள்ள வேண்டும். சீரமைப்பு பணிகளை ஆய்வு செய்வது குறித்து அறநிலையத் துறைக்கு விண்ணப்பித்து, உரிய அனுமதிகளை பெற்று 60 நாட்களில் குடமுழுக்கு நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டார்.

# ஜூலை மாதத்திற்குள் 11 ஆயிரம் புதிய பஸ்கள்: போக்குவரத்து துறை அமைச்சர் தகவல்



கோவை, ஏப்.14
தமிழகத்தில் ஜூலை மாதத்திற்குள் 11 ஆயிரம் புதிய பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாக போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார். கோவை திருச்சி ரோடு சுங்கம் போக்குவரத்து கழக அலுவலகத்தில் புதிய பஸ்கள் இயக்கம், பணி காலத்தில் இறந்த 41 தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு பணி நியமன ஆணை வழங்குதல், வர்ணம் தயாரிப்பு ஆலையில் கூடுதல் இயந்திரம் துவக்குதல் மற்றும் நடமாடும் தானியங்கி பணிமனை வாகனம் துவக்க விழா நேற்று நடந்தது. இதில், தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் கலந்து கொண்டு பேசியதாவது: தமிழ்நாடு முழுவதும் போக்குவரத்து கழகத்தில் 2700 பணியாளர்கள் நியமிக்கப்பட உள்ளார்கள். இதில், கருணை அடிப்படையில் நிரப்பப் படும் பணியிடங்கள் எண்ணிக்கை ஆயிரத்தை எட்டும் நிலையில் இருக்கிறது.

மகளிர் கண்டக்டர்களுக்கு உயரம் குறைவாக இருப்பதாக தெரிவிக்கப் பட்டது. பெண் கண்டக்டர்களின் உயரம் 10 செ.மீ. வரை குறைக்க சலுகை வழங்கி முதல்வர் உத்தரவிட்டார். டிரைவர் பணியிடங்களில் மகளிருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மாநில அளவில் வரும் ஜூலை மாதத்திற்குள் 11,000 புதிய பஸ்கள் பெறப்பட்டு இயக்கத்திற்கு கொண்டு வரப்படும். அரசு போக்குவரத்து கழகம் தனியார் மயமாக்கப்பட மாட்டாது. சிலர் இது தொடர்பாக தவறான தகவல் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். கேரளா, கர்நாடக மாநில போக்குவரத்து கழகங்களை விட தமிழக அரசு போக்குவரத்து கழகம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அகில இந்திய அளவில் தமிழக அரசு போக்குவரத்து கழகம் 19 விருதுகளை வென்றுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

தின கனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
14.4.2025

## போலி முதலீட்டு வலைத்தளங்கள் - சைபர்கிரைம் எச்சரிக்கை

சென்னை, ஏப்.14

பிரபலங்களைப் பற்றிய படங்களை வெளியிட்டு மோசடி செய்யும் முதலீட்டு வலைத்தளங்கள்,போலிசைபர்கிரைம் தளங்கள் கண்டறிந்து நீக்கப்பட்டுள்ளன என்று சைபர் கிரைம் தெரிவித்துள்ளது. ஸ்ரேயா கோஷல், சுதா மூர்த்தி உள்ளிட்டோர் புகைப்படங்களை பயன்படுத்தி மோசடி நடந்ததாகவும் குடியரசுத் தலைவரின் பெயர்களை வைத்துக் கூட மோசடி செய்கிறார்கள் என்றும் சைபர்கிரைம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## 50க்கும் மேற்பட்ட பைக்குகளை திருடிய 17 வயது சிறுவன் கைது

சென்னை, ஏப்.14

சென்னையின் பல்வேறு இடங்களில் கடந்த 2 ஆண்டுகளில் 50க்கும் மேற்பட்ட பைக்குகளை திருடிய 17 வயது சிறுவன் கைது செய்யபட்டார்.Honda Dio ஸ்கூட்டர்களை குறிவைத்து அதிக அளவில் திருடியது விசாரணையில்



அம்பலம் ஆகி உள்ளது. மேலும் கவியரசன் (20) என்பவருடன் சேர்ந்து 150க்கும் மேற்பட்ட பைக்குகளையும் திருடி உள்ளார்.

## சென்னை விமான நிலையத்தில் விமானங்கள் ரத்து, காலதாமதம்: பயணிகள் தவிப்பு



மீனம்பாக்கம், ஏப்.14

டெல்லியில் நேற்றிரவு பலத்த சூறைக்காற்று, மழை மற்றும் மோசமான வானிலை காரணமாக நேற்று நள்ளிரவு 12 மணியளவில் சென்னைக்கு வரவேண்டிய ஏர் இந்தியா பயணிகள் விமானம், சென்னையில் இருந்து இன்று காலை 6 மணியளவில் டெல்லி செல்லவேண்டிய ஏர் இந்தியா விமானம் என 2 விமான சேவைகள் இன்று காலை ரத்து செய்யப்பட்டது.

இன்று அதிகாலை 4.40 மணிக்கு அந்தமான் விமானம், டெல்லிக்கு காலை 5.55 மணி, காலை 9.50 மணி விமானங்கள், மும்பைக்கு காலை 6.40 மணி விமானம், காலை 7.55 மணிக்கு கொச்சி விமானம்,

காலை 11.40 மணிக்கு பாட்னா விமானம் மற்றும் சர்வதேச விமானங்களான ஹாங்காங், பிராங்க்பர்ட், மொரிசியஸ், பாங்காக் உள்பட 12 விமானங்களின் புறப்பாடு மற்றும் சிங்கப்பூர், டெல்லி, மொரிசியஸ், கோவை உள்பட 9 விமானங்களின் வருகை என மொத்தம் 21 விமானங்கள் தாமதமாக இயக்கப்பட்டன.

சில விமானங்கள் 3 மணி நேரம் வரை தாமதமாக இயக்கப்பட்டன. எனினும், இந்த விமானங்களின் வருகை, புறப்பாட்டில் தாமதம் குறித்தும் அதற்கான காரணம் குறித்தும் அவை எப்போது வரும், புறப்படும் என்பது குறித்து பயணிகளுக்கு முறையான அறிவிப்புகள் செய்யப்படவில்லை.


இதனால் 100க்கும் மேற்பட்ட பயணிகள் அவதிப்பட்டனர். இதுகுறித்து சென்னை விமான நிலைய அதிகாரிகள் கூறுகையில், ''டெல்லியில் நேற்றிரவு மோசமான வானிலை காரணமாக சென்னைவரும் விமானங்கள், டெல்லி வான் வெளியை கடந்து சென்னை வரும் விமானங்கள் போன்றவை தாமதமாக வந்ததால் தாமதங்கள் மற்றும் விமானங்கள் ரத்து போன்ற நிலைமை ஏற்பட்டது.

இதுகுறித்து பயணிகளுக்கு அந்தந்த ஏர் லைன்ஸ் நிறுவனங்கள் தகவல் தெரிவித்துள்ளன'' என்றனர்.

## ஊட்டி ரேஸ் கோர்ஸ்ஜ சூழல் பூங்காவாக மாற்றுவது பற்றி திட்ட அறிக்கை தயார் செய்ய சுற்றுலாத்துறை டெண்டர்

ஊட்டி, ஏப்.14

ரேஸ் கோர்ஸ்ஜ சூழல் பூங்காவாக மாற்றுவது பற்றி திட்ட அறிக்கை தயார் செய்ய சுற்றுலாத்துறை டெண்டர் அறிவித்துள்ளது. மாவட்ட நிர்வாகம், தோட்டக்கலைத் துறை, வனத்துறை உள்ளிட்டவைகளுடன் ஆலோசனை நடத்தி திட்ட அறிக்கை தயார் செய்யப்படு



கிறது. சுற்று சூழல் பூங்காவாக மாற்றம் செய்ய, பட்ஜெட்டில் ரூ.70 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

## அதிமுக - பாஜக கூட்டணி 4 மாதங்கள் வரைக்கு கூட நிலைக்குமா, நீடிக்குமா என தெரியாது: வைகோ பேட்டி

சென்னை, ஏப்.14

அதிமுக – பாஜக கூட்டணி 4 மாதங்கள் வரைக்கு கூட நிலைக்குமா, நீடிக்குமா என தெரியாது என சென்னை எழும்பூரில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ பேட்டி அளித்துள்ளார். அதில், செங்கோட்டையன் டெல்லி சென்று வந்ததும், பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ளார் எடப்பாடி பழனிசாமி. திமுக தலைமையிலான கூட்டணி மிகப் பெரிய வெற்றியை பெறும். திடீரென எடப்பாடி பழனிசாமி டெல்லி சென்றார்; பின்னர் அமித்ஷா சென்னை வந்ததும் பாஜகவுடன் கூட்டணி.



பாஜகவுடன் கூட்டணியே கிடையாது என்று கூறி வந்த எடப்பாடி பழனிசாமி திடீரென நிலைப்பாட்டை மாற்றியுள்ளார். அமித் ஷாவின் செய்தியாளர் சந்திப்பில் எடப்பாடி பழனிசாமி பேசவில்லை. செங்கோட்டையன் டெல்லி சென்று வந்ததும், பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ளார் எடப்பாடி பழனிசாமி. 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணி மிகப் பெரிய வெற்றியை பெறும். பாஜகவுக்கு எடுபிடி போல இருந்து கூட்டணி அறிவிப்பை அதிமுக வெளியிட்டுள்ளது.

## நாடு முழுவதும் யு.பி.ஐ.பணப் பரிவர்த்தனை சேவை பாதிக்கப்பட்டுள்ளதால் பயனர்கள் அவதி

டெல்லி, ஏப்.14


நாடு முழுவதும் யு.பி.ஐ. பணப் பரிவர்த்தனை சேவை பாதிக்கப்பட்டுள்ளதால் பயனர்கள் அவதி அடைந்துள்ளனர். இந்தியாவில் கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக டிஜிட்டல் முறை பரிவர்த்தனை அதிகமாக நடைபெற்று வருகிறது. முதலில் வங்கிகள் அல்லது ஏடிஎம்களில் சென்று காத்திருக்கும் பணம் எடுக்க வேண்டும் என்ற நிலை மாறி யுபிஐ சேவை மூலம் போன் மூலமாகவே எளிதில் பணம் செலுத்தும் நிலை வந்தது. இதனால் பெரும்பாலான மக்கள் கூகுள் பே, போன் பே, பே டிஎம் உள்ளிட்ட யுபிஐ செயலிகள் மூலமாகவே பணப் பரிவர்த்தனை செய்து வருகின்றனர்.

மேலும், பெட்டிக் கடை முதல் பெரிய கடைகள் வரை அனைத்திலும் க்யூ ஆர் கோடு இருப்பதால், மக்கள் பணத்தை கையில் கொண்டு செல்ல வேண்டிய தேவையே ஏற்படாது. ஆனால், சில சமயங்களில் யுபிஐ சேவையில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு பயனர்கள் சிரமத்தை சந்திப்பதும் நடந்து வருகிறது. இந்த நிலையில் இன்று நாடு முழுவதும் யு.பி.ஐ. பணப் பரிவர்த்தனை சேவை பாதிக்கப்பட்டுள்ளதால் ஜிபே,



போன்பே, பேடிஎம் உள்ளிட்ட யு.பி.ஐ. சேவை பாதிப்பால் பயனர்கள் அவதி அடைந்துள்ளனர். தொழில்நுட்ப கோளாறால் ஏற்பட்ட பாதிப்பு சரி செய்யப்பட்டு வருவதாக என்.பி.சி.ஐ. தகவல் தெரிவித்துள்ளது.

## கோயில் சீரமைப்பு பணிகள் - ஐகோர்ட் திட்டவட்டம்



சென்னை, ஏப்.14

மண்டல, மாநில அளவிலான நிபுணர் குழு ஒப்புதல் பெற்ற பிறகே கோயில் சீரமைப்பு பணிகளை செய்ய வேண்டும் என்று ஐகோர்ட் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

சத்தியமங்கலம் தாலுகா மாக்கம்பாளையம் பத்ரகாளியம்மன் கோயில் குடமுழுக்கு நடத்த அனுமதி வழங்கக் கோரி வழக்கு தொடரப்பட்டுள்ளது.

குடமுழுக்கு நடத்த அனுமதி வழங்க அறநிலையத் துறைக்கு உத்தரவிடக் கோரி ஐகோர்ட்டில் கோயில் அறங்காவலர் வழக்கு தொடர்ந்தார். விசாரணையின் போது, நிபுணர் குழு அனுமதியின்றி கோயில் சீரமைப்பு பணி நடந்ததால் குடமுழுக்கு நடத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## கார்த்தியின் சர்தார் 2 படப்பிடிப்பு அப்டேட்



கடந்த 2022ம் ஆண்டு, கார்த்தியின் நடிப்பில் வெளியான படம் 'சர்தார்'. இதில் அப்பா மகன் என இரட்டை வேடத்தில் நடித்திருந்தார் கார்த்தி. இந்த படத்தின் வரவேற்பை தொடர்ந்து இரண்டாம் பாகம் தயாராகி வருகிறது. முதலில் இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். ஆனால், தற்போது அவர் நீக்கப்பட்டு, அவருக்கு பதிலாக சாம் சி.எஸ் பணிபுரிந்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. முக்கிய கதாபாத்திரங்களில் எஸ். ஜே. சூர்யா, மாளவிகா மோகனன், பிரியங்கா மோகன் உள்ளிட்டோர் நடிக்கின்றனர். இப்படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் அறிமுக வீடியோ வெளியாகி வைரலானது.

இந்த படத்தின் படப்பிடிப்பு இன்று காலை வரை மைசூரில் நடைபெற்றதாகவும் பெரும்பாலான காட்சிகள் படமாக்கப்பட்டு விட்டதாகவும் சொல்லப்படுகிறது. இருப்பினும் பாடல் காட்சி உட்பட ஒருசில காட்சிகள் பேங்காக் மற்றும் சென்னையில் படமாக்கப்பட உள்ளதாக தற்போதைய தகவல்கள் தெரிவிக்கின்றன. இனிவரும் நாட்களில் அடுத்தடுத்த அப்டேட்டுகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் இந்த படம் தீபாவளி தினத்தை முன்னிட்டு திரைக்கு வரும் என பல தகவல்களும் சமூக வலைதளங்களில் பரவி வருகின்றன.

## சினிமாவில் அறிமுகமாகும் ரன்பீர் கபூரின் சகோதரி



பிரபல பாலிவுட் நடிகர் ரன்பீர் கபூர். இவரது சகோதரி ரித்திமா கபூர். இவர் 'பாலிவுட் வைவ்ஸ்' என்ற ரியாலிட்டி ஷோ மூலம் சின்னத்திரையில் அறிமுகமானார்.

இந்த நிகழ்ச்சி நெட்பிளிக்ஸில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. இந்நிலையில், இவர் தற்போது சினிமாவில் அறிமுகாக உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

அதன்படி, இப்படத்தில் நகைச்சுவை நடிகர் கபில் சர்மாவுக்கு ஜோடியாக ரித்திமா கபூர் நடிக்க உள்ளதாக தெரிகிறது. மேலும், ரன்பீரின் அம்மா நீது கபூரும் இந்த படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிப்பதாக கூறப்படுகிறது.

இது படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரித்திருக்கிறது. விரைவில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜி.வி.பிரகாஷின் இடி முழக்கம் 2வது பாடல் வெளியானது




'தென்மேற்கு பருவக்காற்று, நீர் பறவை, தர்மதுரை, மாமனிதன்' ஆகிய வெற்றி படங்களை இயக்கி கவனம் பெற்றவர் இயக்குனர் சீனு ராமசாமி. இவரது இயக்கதில் சமீபத்தில் வெளியான படம் 'கோழிப்பண்ணை செல்லதுரை'. இப்படம் திரையரங்கை விட ஓ.டி.டி தளத்தில் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது.

இதனையடுத்து, இயக்குனர் சீனு ராமசாமி புதிய படம் ஒன்றை இயக்கி வருகிறார். கலைமகன் முபாரக் தயாரிக்கும் இப்படத்திற்கு 'இடி முழக்கம்' எனப்பெயரிடப்பட்டுள்ளது. இதில், ஜி.வி.பிரகாஷ் கதாநாயகனாக நடித்துள்ளார். அவருக்கு ஜோடியாக காயத்ரி சங்கர் நடித்துள்ளார். மேலும் சரண்யா பொன்வண்ணன், சுபிக்ஷா, சவுந்தரராஜா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்த படம் ஆக்சன் மற்றும் சஸ்பென்ஸ் படமாக உருவாகியுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் இப்படம் வெளியாக உள்ளது.

இந்நிலையில் படத்தின் "கானா விளக்கு மயிலே" பாடலை நடிகர் விஜய் சேதுபதி மற்றும் ஆர்யா ஆகியோர் இணைந்து தங்களது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளனர்.

## கீர்த்தி சுரேஷின் அடுத்த பாலிவுட் படம் கதாநாயகன் இவரா?

தமிழ் மற்றும் தெலுங்கில் முன்னணி நடிகையாக இருந்து வருபவர் நடிகை கீர்த்தி சுரேஷ். இவரது நடிப்பில் தமிழில் கடைசியாக 'ரகு தாத்தா' படம் வெளியானது. அதனைத்தொடர்ந்து பாலிவுட்டில் 'பேபி ஜான்' படத்தின் மூலம் அறிமுகமானார். தற்போது அவர் 'அக்கா' என்ற ஒரு வெப்சீரிஸில் நடித்து வருகிறார். இது நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியாகஉள்ளது. இதனையடுத்துகீர்த்திசுரேஷ், விஜய்தேவரகொண்டா, பாலிவுட்நடிகர்ரன்பீர்கபூர்உள்ளிட்டோருக்கு ஜோடியாக உள்ளதாக கூறப்பட்டது. இந்நிலையில், கீர்த்தி சுரேஷ் தனது அடுத்த பாலிவுட் படத்தில் ராஜ் குமார் ராவுக்கு ஜோடியாக இருப்பதாக முக்கிய தகவல் வெளியாகி இருக்கிறது. அப்படத்தில் நடிப்பது குறித்த பேச்சுவார்த்தையில் அவர் ஈடுபட்டிருப்பதாகவும் படப்பிடிப்பு விரைவில் தொடங்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## ஐ.எஸ்.எல். கால்பந்து இறுதிப்போட்டி: பெங்களூருவை வீழ்த்தி மோகன் பகான் அணி சாம்பியன்



11வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 13ந் தேதி தொடங்கியது. 13 அணிகள் பங்கேற்ற இந்த கால்பந்து திருவிழாவில் லீக் மற்றும் பிளேஆப் சுற்று முடிவில் முன்னாள் சாம்பியன்களான மோகன் பகான் சூப்பர் ஜெயன்ட், பெங்களூரு எப்.சி. அணிகள் இறுதிப்பேட்டிக்குள் கால்பதித்தன. இவ்விரு அணிகளில் மகுடம் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் இறுதி ஆட்டம் கொல்கத்தாவில் இன்று இரவு 7.30 மணிக்கு தொடங்கி நடைபெற்றது.

பரபரப்பாக நடந்த இந்த இறுதிப்போட்டியின் ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோல்களுடன் சமநிலையில் இருந்தன. இதனால் கூடுதலாக 15 நிமிடங்கள் வழங்கப்பட்டது. அப்போது 96வது நிமிடத்தில் மோகன் பகான் அணி வீரர் ஒரு கோல் அடித்தார். இதன் மூலம் மோகன் பகான் அணி 21 என்ற கோல் கணக்கில் பெங்களூரு அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

சாம்பியன் பட்டம் வென்ற மோகன் பகான் அணிக்கு ரூ.6 கோடியும், 2வது இடம் பிடித்த பெங்களூரு அணிக்கு ரூ.3 கோடியும் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது.

## வாணவேடிக்கை காட்டிய அபிஷேக் சர்மா.. பஞ்சாப் அணியை வீழ்த்தி ஐதராபாத் அபார வெற்றி

ஐ.பி.எல். தொடரில் இன்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற பஞ்சாப் அணியின் கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயர் முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தார். அதன்படி பேட்டிங்கை தொடங்கிய பஞ்சாப் அணி ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடியது. ஷமி வீசிய முதல் ஓவரிலேயே ஹாட்ரிக் பவுண்டரி அடித்து பிரம்சிம்ரன் சிங் அதிரடி காட்டினார்.

மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் ஆன பிரியன்ஷ் ஆர்யாவும் வேகமாக மட்டையை சுழற்ற பஞ்சாப் 3 ஓவர்களில் 50 ரன்களை கடந்தது. தொடர்ந்து அதிரை காட்டிய பிரியன்ஷ் ஆர்யா 13 பந்துகளில் 36 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயரும் அதிரடி காட்ட பஞ்சாப் அணியின் ரன்ரேட் வேகமாக உயர்ந்தது. வெறும் 8.1 ஓவர்களிலேயே பஞ்சாப் 100 ரன்கள் அடித்தது.

இதனிடையே பிரம்சிம்ரன் சிங் 42 ரன்களில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய நேஹல் வதேரா நிதானமாக விளையாட ஸ்ரேயாஸ் ஐயர் ஐதராபாத் பந்துவீச்சை வெளுத்து வாங்கினார். வதேராவின் ஒத்துழைப்புடன் வெறும் 22 பந்துகளில் ஸ்ரேயாஸ் அரைசதம் அடித்தார். தொடர்ந்து ஐயர் அதிரடி காட்ட மறுமுனையில் நேஹல் வதேரா 27 ரன்களிலும், ஷசாங்க் சிங் 2 ரன்களிலும், மேக்ஸ்வெல் 3 ரன்களிலும் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர். தொடர்ந்து சிறப்பாக ஆடிய ஸ்ரேயாஸ் வெறும் 36 பந்துகளில் 82 ரன்கள் அடித்த நிலையில் அவுட்டானார். இறுதி கட்டத்தில் மார்கஸ் ஸ்டோய்னிஸ் (34 ரன்கள்) அதிரடியாக விளையாடினார். குறிப்பாக முகமது ஷமி வீசிய ஆட்டத்தின் 20வது ஓவரில் ஹாட்ரிக் சிக்சர் உட்பட 4 சிக்சர்கள் விளாசி அசத்தினார். முடிவில் 20 ஓவர்களில் பஞ்சாப் 6 விக்கெட்டுகளை இழந்து 245 ரன்கள் குவித்தது. ஐதராபாத் தரப்பில் அதிகபட்சமாக ஹர்ஷல் படேல் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 246 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி களமியங்கிய ஐதராபாத் அணியில், அபிஷேக் சர்மா மற்றும் டிராவிஸ் ஹெட் ஆகியோர் முதலாவதாக களமிறங்கினர். தொடக்கம் முதலே இந்த ஜோடி அதிரயாக ரன்கள் குவிக்கத் தொடங்கியது. பின்னர் அபிஷேக் சர்மா, டிராவிஸ் ஹெட் ஆகியோர் தங்கள் அரைசதத்தினை பதிவு செய்து அசத்தினர். இந்த ஜோடியில் சிறப்பாக ஆடி வந்த டிராவிஸ் ஹெட் 66 ரன்களில் கேட்ச் ஆகி வெளியேறினார். அடுத்ததாக அபிஷேக் சர்மாவுடன், கிளாசன் ஜோடி சேர்ந்தார்.

தொடர்ந்து வாணவேடிக்கை காட்டி வந்த அபிஷேக் சர்மா 40 பந்துகளில் தனது சதத்தை பூர்த்தி செய்து அசத்தினார். தொடர்ந்து பஞ்சாப் அணியினரின் பந்துவீச்சை துவம்சம் செய்த அபிஷேக் சர்மா, அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார்.

ஐதராபாத் அணி வெற்றிக்கு 24 ரன்கள் தேவைப்பட்ட நிலையில், அபிஷேக் சர்மா 55 பந்துகளில் 10 சிக்சர்கள், 14 பவுண்டரிகளுடன் 141 ரன்களில் கேட்ச் ஆகி வெளியேறினார். முடிவில் இஷான் கிஷன் 9 (6) ரன்களும், கிளாசன் 21 (14) ரன்களும் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இறுதியில் ஐதராபாத் அணி 18.3 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 247 ரன்கள் எடுத்தது. பஞ்சாப் அணியின் சார்பில் அர்ஷ்தீப் சிங் மற்றும் சாஹல் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். இதன்மூலம் பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஐதராபாத் அனி அபார வெற்றிபெற்றது.

இதன்படி ஐதராபாத் அணி நடப்பு ஐ.பி.எல். தொடரில், 4 புள்ளிகளுடன் 2வது வெற்றியை பதிவு செய்தது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.